# 1. சொர்க்க பூமி

## அலகு அறிமுகம்

நாம் அனைவரும் ஒரு சுற்றுச்சூழல் அமைப்பில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தச் சுற்றுச்சூழலை உடனடித் தேவைக்காக மாசுபடுத்துவதால் நாம் வெகு காலத்திற்குப் பாதிப்பிற்குள்ளாகிறோம். சுற்றுச்சூழலை மாசுபடுத்தி அதற்குப் பெரும் அழிவை விளைவித்துக் கொண்டிருக்கிறோம். எல்லா உயிரினங்களும் உயிர் வாழக் காற்றும் நீரும் உணவும் இன்றியமையாதவை. இவை மாசு பட்டாலும் இவற்றில் குறைவு ஏற்பட்டாலும் மீள முடியாதப் பலவிதமான கெடுதல்கள் ஏற்படுகின்றன.



இதனால் இயற்கைச் செல்வங்கள் அழியாமலும் மாசுபடாமலும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகிறது. இதுபற்றிய விழிப்புணர்வை வரும் தலைமுறையிடம் ஏற்படுத்துவது இன்றியமையாத தேவையாகிறது. இதன் அடிப்படையில் இயற்கையின் கண்ணீர், நமக்கு நாமே என்ற இரு பாடப்பகுதிகள் இவ்வலகில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம், இயற்கைச் சுரண்டலைத் தடை செய்ய வேண்டும், இயற்கையையும் சுற்றுப்புறத்தையும் மாசடையாமல் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பான்மை மாணவர்களிடம் உருவாக வேண்டும். மேலும் அவை தொடர்பான கதைகள், கவிதைகள், கட்டுரைகள், செய்தித்துணுக்கள் வாசிக்கவும் எழுதவும் படைப்புகளைப் படைக்கவும் வகுப்பறைச் செயல்பாடுகளில் ஈடுபடவும் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளவும் பத்திரிகைச் செய்திகளை வாசிக்கவும் எழுதவும் மாணவர்கள் திறன் பெறவேண்டும்.

**நேரம்**

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்:
24 பிரிவேளைகள் (சுமார்)

## முதன்மைக் கற்றல் அடைவுகள்

- இயற்கைச் சுரண்டலுக்கு எதிரான கதை, கவிதைகள் படைக்கிறார்கள். மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.
- வாசித்த படைப்புகளை வேறு மொழிவெளியீட்டு வடிவங்களாக மாற்றி அமைக்கிறார்கள்/வெளியிடுகிறார்கள்.
- சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கட்டுரைகள், குறிப்புகள் தயாரிக்கிறார்கள்.
- சுற்றுப்புறம் மாசடைதலுக்கு எதிரான முத்திரை வாக்கியங்கள், விளம்பரங்கள் தயாரிக்கிறார்கள்.
- சூழ்நிலைக்கு ஏற்றவாறு கவிதை எழுதுகிறார்கள்.

## கற்றல் துணைக் கருவிகள்

- சுற்றுச் சூழல் தொடர்பான படங்கள்
- பத்திரிகைச் செய்தித் தொகுப்புகள்
- அலகோடு தொடர்புடைய பாடல் தொகுப்பு
- சுற்றுச் சூழல் கட்டுரைகள்
-
-

## அலகிற்குள் செல்லும்முன்

- கவிதையை இராகத்துடனும் பாவத்துடனும் பாடிப் பார்த்து விட்டீர்களா?
- செயல்பாடுகளை எல்லாம் வாசித்துப் புரிந்துகொள்ளுங்கள்.
- பத்திரிகைச் செய்தித் தொகுப்பு ஒன்று தயார் செய்து கொள்ளுங்கள்.
- இயற்கைச் சீற்றங்கள் – படத்தொகுப்பு தயாரித்துக் கொள்ளுங்கள்.
-

# அலகு வலைச்சட்டம்

| கருத்துகள் / திறன்கள் | கற்றல் செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ✧ கருத்துகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுதல், பொருள் நயம் அறிந்து எழுதுதல், எதுகை, மோனைச் சொற்கள் அறிதல் | • *கதை, கவிதை* | ¤ இயற்கைச் சுரண்டலுக்கு எதிரான கதை, கவிதைகள் படைக்கிறார்கள், மெட்டமைத்துப் பாடுகிறார்கள். |
| ✧ சொந்த நடையில் கூறுதல், செய்திகளைத் தொகுக்கும் முறை அறிதல், சொல்லழகு கையாளுதல் | • *கதையை உரைநடையாக மாற்றுதல்.* | ¤ வாசித்த படைப்புகளை வேறுமொழி வெளியீட்டு வடிவங்களாக மாற்றி வெளியிடுகிறார்கள். |
| ✧ பொருள் பற்றிய அறிவு பெறுதல், பொருத்தமான தலைப்பு எழுதுதல், மேற்கோள்கள் அமைத்தல் | • பத்திரிகைச் செய்திகள். | ¤ சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட கட்டுரைகள், பத்திரிகைச் செய்திகள் தயாரிக்கிறார்கள். |
| ✧ சுருக்கமான தெளிவான வாக்கியம் கூறுதல், கவர்ச்சியான வடிவமைத்தல், சுவரொட்டி, விளம்பரம் வேறுபாடு அறிதல் | • முத்திரை வாக்கியங்கள் விளம்பரங்கள். | ¤ சுற்றுப்புற மாசடைதல், இயற்கைச் சுரண்டலுக்கு எதிரான முத்திரை வாக்கியங்கள் விளம்பரங்கள் தயாரிக்கிறார்கள். |
| ✧ தலைப்பு கூறுதல், ஒரே ஓசையுடைய சொற்களைப் பயன்படுத்துதல், பொருள், சொல், வாக்கியம் தேர்வு செய்தல் | • கவிதை | ¤ சூழ்நிலைக்கு ஏற்றவாறு கவிதை எழுதுகிறார்கள். |

## நுழைவுச் செயல்பாடு

கலந்துரையாடுவோம் என்ற தலைப்பில் கொடுக்கப் பட்டுள்ள பகுதிக்குள் செல்லவேண்டும்.

இயற்கை அழகை வர்ணிக்கும் சில கவிதை வரிகளைச் சொல்லி அவ்வாறு இருந்த அழகான இயற்கை இன்று அடைந்துள்ள நிலைமை என்ன என்று கேட்டுப் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் அடிப்படையில் கந்துரையாடல் நடத்துங்கள். மாணவர்கள் கூறும் முக்கியமான கருத்துகளைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

புதிய வீடுகள் கட்டுகிறார்கள், மரங்கள் வெட்டப்படுகின்றன, ஆற்றுமணல் அள்ளப்படுகிறது, வயல் வெளிகளில் வீடுகள் கட்டுகிறார்கள், குன்றுகள் இடிக்கப்படு கின்றன இவைபோன்ற கருத்துகள் மாணவர்களிடம் இருந்து வரவண்டும். விடுபட்டவற்றை நீங்கள் உங்கள் கருத்தாகச் சேருங்கள்.

இந்தக் கருத்துத் தொகுப்பிற்குப் பின் இதுபோல இயற்கை அழிவு பற்றிய ஒரு பாடலைப் பாடிப் பார்க்கலாம் என்று கூறிப் பாடப்பகுதிக்குள் செல்லலாம்.

## இயற்கையைச் சீண்டாதே

ஏழாம் வகுப்பின் முதல் பாடப்பகுதி. மாணவர்கள் ஒவ்வொருவராக வாசிக்கட்டும். குழுவாக வாசிக்கட்டும். பிறகு நீங்களும் வாசியுங்கள். உங்கள் வாசித்தல் மாணவர்களுக்கு ஒரு மாதிரி வாசித்தலாக இருக்கட்டும். வாசிக்கும் வரிகளுக்குப் பொருள் கூறட்டும். பாடல் பகுதியில் அவர்களுக்குத் தெரியாத சொற்களைக் கண்டுபிடித்துப் பட்டியல் தயாரிக்கட்டும். அவற்றைக் கரும்பலகையில் எழுதிப் பொருளைத் தெளிவாக்குவீர்களல்லவா? பாடநூலின் இறுதிப்பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள **அகரமுதலி** (பக்கம் 94-95) யையும் பயன்படுத்தக் கற்றுக்கொடுங்கள். **(விலங்கு, சீர், இலக்கு, சீண்ட)** பொருள் புரிந்த இந்த வாசித்தலுக்குப் பிறகு மாணவர்களிடம் எளிமையான சில வினாக்களும் விளக்கங்களும் கேட்டு அவர்கள் பாடப்பகுதியைப் புரிந்து கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து பாடப்புத்தகச் செயல்பாடுகளுக்குச் செல்லலாம்.

## மெட்டமைத்துப்பாடுங்கள்

**பாடலுக்கு மெட்டமைத்தலை எவ்வாறு மதிப்பீடு செய்யலாம்?**

- பொருத்தமான மெட்டு
- பொருள் சிதைவு இன்மை
- தாளம், உச்சரிப்பு
- குரல் வளம், ஏற்றத்தாழ்வு
- குழுவாகப்பாடும் போது ஒன்றாகப் பாடுதல்
- சிறிய அங்க அசைவுகள்

- பாடலைத் தனித்தனியாக மெட்டமைத்துப் பாடிப் பழகட்டும்.
- பின்னர் குழுக்களாக மெட்டமைத்துப் பாடட்டும்.
- உங்கள் மெட்டையும் மாணவர்களிடம் பாடிக் காட்டுங்கள்
- ஒரு போட்டியாக இச்செ யல்பாட்டை நடத்துங்கள்.
- மாணவர்களே சிறந்த குழுவைத் தேர்வு செய்யட்டும்.
- நல்ல மெட்டு எது என்று தீர்மானித்த பிறகு அதே மெட்டில் நீங்களும் குழந்தைகளும் இணைந்து நன்றாகப் பாடுங்கள்.
- ஓய்வு நேரங்களிலும் உரக்கப் பாடிப் பழகட்டும்.

**இதுபோன்ற கருத்துக்கள் அமைந்த ஒன்றிரண்டு பாடல்களை நீங்கள் சேகரித்து வைத்துக் கொள்வீர்கள் அல்லவா?**
**மாணவர்களையும் சேகரித்து வரச் சொல்லுங்கள். தொடர் நிலை மதிப்பீட்டிற்கு உட்படுத்துங்கள்**

*ஆசிரியர் உதவிக்கு*

### உலகம் காப்போம்

*நிலம் நீர் காற்று ஆகாயம்*
*நெருப்பு ஆகிய இவ்வைந்தும்*
*கலந்தே இருக்கும் உலகத்தைக்*
*காத்தல் மனிதப் பண்பாகும்.*
*இயற்கை என்னும் இப்பொருள்கள்*
*எல்லாம் தூய்மையானதுவே!*
*செயற்கை என்ற பெயராலே*
*சேறாய்க் கலங்கிப் போனதுவே!*
*மாசை நீக்க மரக்கன்றை*
*மகிழ்ந்தே நட்டால் நலந்தருமாம்*
*தேங்கும் நீரை உட்கொண்டு*
*பாங்காய்க் காற்றைத் தருவதனால்*
*ஓங்கும் வாழ்வைப் பெறுகின்றோம்*
*உலராத் தூய்மை அடைகின்றோம்*

**- கவிஞர் செம்பை சேவியர்**

## சுற்றுப்புறம் பேணுவோம்

*இயற்கைக் கெதிராகயின்று*
*எத்தனையோ கோலங்கள் - இங்கு*
*இயன்றவரை எடுத்துரைப்பேன்*
*அது விளைக்கும் தீமைகள்*

*தொழிலகங்கள் வெளிப்படுத்தும்*
*தொடர்மூட்டப் புகைதான் - உயர்*
*எழில்மாட மாளிகைக்கும்*
*இவ்வுடற்கும் பகையாம்*

*தொற்றுநோயும் மற்றநோயும்*
*தொடுக்கும் தொல்லை அகன்றிட*
*சுற்றுப்புறங்கள் அத்தனையும்*
*சுத்தமாகப் பேணுவோம்.*

***- வலசை. ப. கணேசன்***



### கவர்ந்த வரிகள்

நாம் பாடி ரசித்த பாடலில்,

**இயற்கை காட்டும் வழியினிலே**
**இயங்கி வந்தால் இன்பம் வரும்**
**செயற்கை வழியில் செயல்பட்டால்**
**சீரெல்லாம் அழிந்து துன்பம் வரும்**

இந்த நான்கு வரிகள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. அதற்குக் காரணம்,

- இயற்கை, செய்கை - இன்பம் வரும் துன்பம் வரும் என்று முரண் சொற்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.
- இயற்கை, இயங்கி- அடி மோனை வந்துள்ளது
- இயற்கை, செயற்கை - அடி எதுகை வந்துள்ளது
- இயற்கை இன்பம் தரும் செயற்கை துன்பம் தரும் என்ற பொருள்

**ஒரு பாடலில்**

**அடிகள் தோறும்**

- முதல் எழுத்து ஒன்றி வருவது - மோனை
- இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது - எதுகை
- கடைசி எழுத்து ஒன்றிவருவது இயைபு

இதுபோல மாணவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குப் பிடித்த வரிகளைப் பாடப்பகுதியிலிருந்து தேர்வு செய்து எழுதட்டும். பிடித்ததற்கான காரணங்களைக் கூறட்டும். வகுப்புக் குறிப்பேட்டில் எழுதட்டும்.



## மாற்றி எழுதலாம்

ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வேறொரு மொழி வெளியீட்டு வடிவமாக மாற்றும் திறன் மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும். ஒவ்வொரு மொழி வெளியீட்டு வடிவத்திற்கும் அதற்கே உரிய சில இயல்புகள் உள்ளன. கவிதை வடிவத்திற்கும் உரைநடை வடிவத்திற்கும் இடையேயுள்ள வேறு பாடுகளை மாணவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். கவிதையிலுள்ள பொருள் தெரியாத சொற்களுக்கு முன் செயல்பாடுகளில் பொருள் கண்டுபிடித் துள்ளோம். அவற்றை இங்குப் பயன் படுத்தலாம்.

**வெளியீட்டு வடிவம் மாறும் போது கவனிக்க வேண்டியவை**

- கருத்துத் தெளிவு
- பத்தி பிரித்துக் கூறுதல்
- மாற்றி எழுதும் திறன்
- கருத்து மாறாமை
- செய்திகளைத் தொகுத்தல்
- எழுத்து நடை

**விளைச்சல் செய்யப் பயன்படும் விளைநிலங்களில் எல்லாம் நாம் வீடு கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். இப்படி நீர்பிடிப்புப் பகுதிகளில் எல்லாம் வீடு கட்டினால் நிலத்தடி நீர் வளம் குறைந்து தண்ணீர் பஞ்சம் ஏற்படும்**

இந்தக் கருத்தைக் கூறும் பாடல் வரிகள் எவை? என்று கேட்டுச் செயல் பாட்டைத் தொடங்குங்கள். இதன் அடிப்படையில் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து ஒரு போட்டிச் செயல்பாடாக நடத்துங்கள். ஒரு குழுவினர் பொருள்கூற மற்றவர்கள் பொருத்தமான வரிகளைக் கூறட்டும். கூறும் கருத்துகளைத் தொகுத்து உரைநடை வடிவில் எழுதட்டும். வகுப்பறைக் குறிப்பேட்டிலும் எழுதி வைக்கட்டும். எழுதுதலைத் தொடர் நிலை மதிப்பீட்டுக்கு உட்படுத்தலாம்.

## அழிவை நோக்கி

உரையாடல் வடிவில் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பகுதியை இரண்டு மாணவர்களை மாறி மாறி வாசிக்கச் செய்யலாம். வாசித்தலைப் பொருளுடையதாகவும் கவனிக்கவும் செய்வதற்கு என்ன செய்யலாம்? பாடப்பகுதியை வாசிக்க ஆரம்பிக்கும் முன்னரே சில கேள்விகளைக் கேட்டு, வாசித்து முடித்த பிறகு பதில் கூறச் செய்யலாம். இப்பாடப்பகுதி நிறைய தகவல்களைத் தரும் பகுதி. இதுபோன்ற பாடப்பகுதிகளை வினாவிடைப் போட்டிக்காகத் தேர்ந்தெடுப்பது நன்று. குழந்தைகள் கேள்விகளை உருவாக்க வேண்டுமெனில் பலமுறை பாடப்பகுதியை வாசிக்க வேண்டும். வினாவிடைப் போட்டியை எவ்வாறு நடத்தலாம்?

**வாசித்தல்**

எழுதப்பட்ட வரிகளில் பொதிந்துள்ள கருத்துக்களைப் புரிதலே வாசித்தல். இந்த வாசித்தலைக் குழந்தைகளிடம் தூண்டுவதும் அதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதுமே ஆசிரியரின் கடமை.

- இயன்ற அளவு வினாக்களை உருவாக்கட்டும்.
- அவற்றிற்கான பதில்களையும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்
- அடுத்த குழுவினரிடம் கேட் கட்டும்.
- சரியான பதிலுக்கு மதிப்பெண் அளியுங்கள்.
- அனைத்துக் குழுவினருக்கும் சமவாய்ப்பு அளியுங்கள்.
- வெற்றி பெற்றவர்களைப் பாராட் டுங்கள்.

இப்படி நடைபெறும் வினாப்போரின் இறுதியில், வாசிக்கலாம், கண்டு பிடிக்கலாம் என்று கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான விடையையும் கண்டுபிடித்துக் கூறச் செய்யலாம். வகுப்பறைக் குறிப்பேட்டிலும் எழுதச் சொல்லுங்கள்.



**நிறைவு செய்யலாம்**

சொற்சூரியன் உருவாக்குதல் என்பது ஆரம்ப வகுப்புகள் முதலே குழந்தைகள் ஆர்வமாகச் செய்யும் ஒரு செயல்பாடாகும். ஒரு மையக் கருத்தின் அடிப்படையில் அதனோடு தொடர்புடைய வேறு சொற்களைக் கண்டுபிடிக்கவேண்டும். இதைத் தனிநபர் செயல்பாடாகக் கொடுங்கள். எத்தனை வார்த்தைகள் எழுத முடியுமோ எழுதட்டும். அதிகமான சொற் களைக் கண்டுபிடித்து எழுதுபவர் யார்? சிறிய பாராட்டு, பரிசு வழங்குங்கள். குறிப்பேட்டில் எழுதச் செய்யுங்கள்.

எ.கா :

- மரம் வெட்டுதல், மணல் அள்ளுதல், பறவைகளைக் கொல்லுதல், விலங்குகளை வேட்டையாடுதல், தாவரங்களை அழித்தல்.

**கவிதை எழுதுவோம்**

பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாட்டில் உள்ள பாடலை நீங்கள் முழுமையாக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

***மரங்களை வெட்டினோம்***
***மழைவளம் குறைந்தது***
***ஆற்றுமணலை அள்ளினோம்***
***நிலத்தடிநீர் குறைந்தது***
***விளைநிலம் அழித்தோம்***
***விளைபயிர் இழந்தோம்***
***இயற்கையை அழித்தோம்***
***இனபத்தை இழந்தோம்***

இதுபோன்று எழுதிக்கொள்ளலாம் அல்லவா?

இனி, செயல்பாட்டிற்குள் செல்லலாம். **இயற்கையைச் சீண்டாதே** என்ற பாடலையும் **அழிவை நோக்கி** என்ற உரையாடலையும் **உயிர் தரும் மரமே** என்ற கட்டுரையையும் வாசித்தும் பாடியும் கலந்துரையாடியும் கருத்துகளைப் புரிந்து கொண்டிருப்பார்கள் அல்லவா? அதனை மனதில் கொண்டு, விடுபட்ட இடங்களை நிரப்பிக் கவிதையை நிறைவு செய்யட்டும். நிறைவு செய்த கவிதைகளை ஒவ்வொருவரும் வாசிக்கட்டும். அவரவர் கவிதை களைச் சுயமதிப்பீடு செய்யட்டும். கவிதை மதிப்பீட்டிற்கான குறிப்புகளை மாணவர்களுக்குக் கொடுப்பீர்கள் அல்லவா?

**கவிதைகள் எழுதும் போது . . .**

பாடலின் பொருள்

சொல் தேர்வு

கட்டமைப்பு

ஓசை நயம் (எதுகை மோனை)

பெருத்தமான தலைப்பு

தாங்கள் எழுதிய கவிதைகளை மாண வர்கள் திருத்தி அமைக்கட்டும். திருத்தி எழுதிய கவிதைகளைத் தொகுப்பாக வும் ஆக்கிக் கொள்ளலாம். கவிதைக்குப் பொருத்தமான தலைப்பு கொடுக்கச் சொல்லுங்கள்.

கவிதைத் தொகுப்பைத் தொடர் மதிப் பீட்டிற்கு உதவும் வகையில் பயன் படுத்திக் கொள்வீர்கள் அல்லவா?

## நமக்கு நாமே

இந்தப் பாடப்பகுதியில் சுற்றுப்புறம் மாசடைதல் என்ற கருத்தின் அடிப்படையில் கவிதை, கட்டுரை, துணுக்குகள் இடம்பெற்றுள்ளன. எனவே இது தொடர்பான செய்திகள், படங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு தயார் செய்து கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

### வாசிக்கலாம் கண்டுபிடிக்கலாம்

ஜூன் - 5 உலகச் சுற்றுச்சூழல் தினம் பள்ளியில் கொண்டாடி இருக்கலாம். மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் கொடுத்திருக்கலாம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதிமொழி எடுத்திருக்கலாம். இவற்றை நினைவபடுத்திக் கலந்துரையாடல் நடத்துங்கள். தொடர்ந்து பாடப்பகுதிக்குள் நுழையுங்கள். மாணவர்களின் தனி வாசிப்பிற்கு வாய்ப்பு கொடுங்கள். தொடர்ந்து குழுவாகப் பிரிந்து வாசிக்கட்டும். புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள வினாவுடன் வேறு பல வினாக்களும் கரும்பலகையில் எழுதுங்கள். எல்லா வினாக்களுக்கும் விடை கண்டுபிடிக்கட்டும். குறிப்பேட்டில் எழுதட்டும்.

- அமிலமழை எவ்வாறு பெய்கிறது?
- காற்று எவ்வாறு மாசடைகிறது?
- அதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?
- குடிநீர்த் தட்டுப்பாடு எவ்வாறு உண்டாகிறது?
- எவ்வாறு அதைச் சரி செய்யலாம்?

இதுபோல இன்னும் சில கேள்விகளைக் கொடுங்கள். பாடப்பகுதியை வாசித்து விடை கண்டுபிடித்துக் கூறட்டும்; எழுதட்டும்.

## அமுதத்தில் விஷம்

கவிஞர் வைரமுத்துவைத் தெரியுமா? என்று கேட்டு அவரது படத்தைக் காண்பித்து ஒரு கலந்துரையாடலுடன் பாடத்தைத் தொடங்கலாம். அவர் எழுதிய ஒரு புதுக்கவிதையை வாசிப்போம் எனக் கூறிப் பாடப்பகுதிக்குள் செல்லுங்கள்.

- மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியாக வாசிக்கட்டும்
- கவிதையை நீங்கள் ஒருமுறை வாசித்துக் காட்டுங்கள்
- புதுக்கவிதை வாசித்தலின் வேறுபாட்டை உங்கள் வாசிப்பு மூலம் உணர்த்துங்கள்
- **நான் கண்ட கவிஞர்** என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுவதற்காகக் கவிஞர் வைரமுத்து பற்றிய தகவல்களைப் பத்திரிகைகள், இதழ்கள் இவற்றிலிருந்து சேகரிக்கச் சொல்லுங்கள்.

**வைரமுத்துப் பெற்ற முக்கிய விருதுகள்**

1990 – கலைமாமணி

2003 – சாகித்ய அகாதமி

2003 – பத்மஸ்ரீ

2014 – பத்மபூசன்

**வைரமுத்து**

புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர். கவிஞர். சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை ஆறுமுறை பெற்றுள்ளார். நிழல்கள் (1980) என்னும் திரைப்படத்தில் பொன்மாலைப் பொழுது என்னும் முதல் பாடலை எழுதிய இவர் 2009 ஜனவரி வரை 5800 திரைப்பாடல்கள் எழுதியுள்ளார். இசையமைப்பாளர்கள் இளையராஜா, A. R. ரஹ்மான் இவர்கள் இசையமைப்பில் புகழ்பெற்ற பல பாடல்களை எழுதியுள்ளார்.

## ஜூன் 5 - உலகச் சுற்றுச்சூழல் தினம்

வகுப்பில் விழாவைக் கொண்டாட வேண்டும். எவ்வாறு நடத்தலாம்? குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள். கலந்துரையாடிக் கீழ் வருவனவற்றை முடிவு செய்யுங்கள்.

- நாள், நேரம்
- நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்
- அழைப்பிதழ் தயாரித்தல்
- சிறப்புப் பேச்சாளர்
- பத்திரிகைச் செய்திகள், படங்கள், கண்காட்சி
- மாணவப் பேச்சாளர்

### அழைப்பிதழ் தயாரித்தல்

மற்ற வகுப்பு மாணவர்களையும் ஆசிரியர்களையும் விழாவிற்கு அழைப்பதற்கான அழைப்பிதழ் தயாரிக்க வேண்டும். அதில் என்னென்ன இருக்க வேண்டும்? எப்படி அமைக்கலாம்? குழுவாக அமர்ந்து அழைப்பிதழ்கள் தயாரிக்கட்டும்.

### நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்

நிகழ்ச்சி ஒழுங்கு, நாள், நேரம், இடம் போன்றவை இடம் பெறட்டும். நீங்கள் ஒரு மாதிரி நிகழ்ச்சி நிரல் தயாரித்துக் காட்டுங்கள். மாணவர்கள் அதுபோல செய்யட்டும்.

> வகுப்பில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் இருக்கலாம். இதுபோன்ற செயல்பாடுகளில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்து ஊக்கப்படுத்துங்கள். அழைப்பிதழ்களில் படம் வரைய, கோடுகள் போட, காகிதங்கள் வெட்டுவதற்கு, படங்கள் ஒட்டுவதற்கு அவர்களையும் பயன்படுத்துங்கள்.

மாணவர்கள் தயாரிக்கும் அழைப்பிதழ்களையே பிற ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியருக்கும் கொடுத்து விழாவிற்கு அழையுங்கள். அது மாணவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியையும் இதுபோன்ற செயல்களில் ஆர்வமாக ஈடுபடுவதற்கான உற்சாகத்தையும் ஏற்படுத்துமல்லவா? மாணவர்களின் தயாரிப்புகளைப் படைப்புத் தொகுப்பில் உட்படுத்துங்கள்.

முத்திரை வாக்கியங்கள் தயார் செய்து பள்ளியில் ஆங்காங்கே பதிவு செய்து வைக்கலாம்.

## சுற்றும் பூமியின் சுற்றுச்சூழல் காப்போம்

பாடப்பகுதியைத் தொடங்குவதற்கு முன் சேகரித்து வைத்துள்ள சுற்றுச்சூழல் மாசடைதல் தொடர்பான படங்கள், செய்தித் தொகுப்பை எடுத்துக் கொள்ளுங்கள். நமது சுற்றுப்புறம் மாசடைதலைத் தடுக்க என்னென்ன செய்யலாம் என்று கலந்துரையாடலைத் தொடங்குங்கள்.

**நெகிழியை எரிக்காதே**
**நச்சு வாயுப் பரப்பாதே**

- ♦ வீட்டுக்கு ஒரு மரம் நட்டு வளர்க்க வேண்டும்
- ♦ இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும்
- ♦ பிளாஸ்டிக்கை எரிக்கக் கூடாது

மாணவர்கள் கூறுவதைக் கரும்பலகையில் எழுதுங்கள். இதுபோன்ற செய்திகளைக் கூறும் பாடப்பகுதியை வாசியுங்கள் என்று கூறிப் பாடப்பகுதிக்குள் செல்லுங்கள். கருத்துக்களை வாசிக்கட்டும். ஒரு சில வினாக்களைக் கேளுங்கள். பதில் கூறட்டும். தொடர்ந்து புத்தகத்தில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கும் விடை கூறட்டும். குறிப்பேடுகளிலும் எழுதிக் கொள்ளட்டும்.

மரம் நடுவோம்
மழை பெறுவோம்

- ♦ காற்று மாசடைவது பற்றி வைரமுத்து கூறும் கருத்துகள் யாவை?
- ♦ பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள் யாவை?

இந்தக் கேள்விகளுக்கும் விடை கண்டுபிடித்து எழுதட்டும்.
சுற்றுச்சூழல் கவிதைகளைச் சேகரித்து எனது பாடல் தொகுப்பில் சேர்க்கட்டும்.

**தமிழ்ச் சொற்கள் காண்போம் . . .**

பிளாஸ்டிக் என்பதற்கு நல்ல தமிழ் ‘**நெகிழி**’ என்று பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இதுபோல ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடிக்க வேண்டும். செயல்பாட்டை எப்படி ஆர்வமுள்ளதாகச் செயல்படுத்தலாம்? பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள **தூய தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களைக்** கண்டுபிடிக்கச் சொல்லலாமா?

- **குளிரூட்டி**
- **காற்று வடிகட்டி**
- **நீர் சூடாக்கும் கருவி**
- **மின்னஞ்சல்**
- **பேருந்து**
- **குண்டு விளக்கு**

இதுபோல நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில சொற்களுக்கான தமிழ்ச் சொற்களையும் கண்டுபிடிக்கச் செய்யலாமா?

- **குட்மார்னிங் சார்**
- **டெஸ்க்**
- **புக்**
- **பென்சில்**
- **பென்**
-
-

மரத்தை வெட்டுவதும்
மனிதனை வெட்டுவதும் ஒன்று !
அப்படி வெட்டுபவனைச் சிறையில்
அடைப்பது
நன்று !

நெகிழிப்
பொருட்களைத்
தவிர்ப்போம்



**கதையை முழுமை செய்யலாம்**

கதை கேட்பது, கதை கூறுவது போன்றவை மாணவர்களுக்குப் பிடித்த மானவைதான். இந்தச் செயல்பாட்டை எவ்வாறு உற்சாகமாக ஆரம்பிக்கலாம்? மாணவர்களுக்கு நன்கு தெரிந்த கீழ் வகுப்புகளில் தெரிந்துகொண்ட கதைகளைக் குறிப்புகளாகக் கொடுத்து முழுக் கதையாகச் சொல்லச் செய்யுங்கள்.

1. பாட்டி - வடை - காகம் - நரி - பாடல் - வடைவிழுதல் - காகம் ஏமாற்றம்
2. ஆமை - முயல் - பந்தய ஓட்டம் - முயல் வேகம் - ஓய்வு - உறக்கம் - ஆமை முந்துதல்
3. திராட்சைத் தோட்டம் - நரி - பசி - திராட்சைக் குலைகள் - உயரம் - துள்ளுதல் - எட்டவில்லை - சீசீ புளிக்கும்

**படைப்புகளை மேம்படுத்த . .**

- ♦ கதையின் முழு வடிவத்தை சார்ட்டில் எழுதித் தொங்க விடுங்கள்
- ♦ வாசிக்கட்டும்
- ♦ தங்கள் படைப்புகளோடு ஒப்பிடட்டும்
- ♦ கதை அமைப்பு பற்றிப் புரிந்துகொள்ளட்டும்
- ♦ முடிவுக்கு வரட்டும்
- ♦ திருத்தி புதிய அமைப்பில் எழுதட்டும்

இதுபோல ஒரு கதை நமது புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதை முழுமைப் படுத்தலாமா என்று கேட்டுச் செயல் பாட்டைச் செய்யத் தூண்டுங்கள். தனிநபர் செயல்பாடாகச் செய்யட்டும். சிறந்த முறையில் எழுதியவர்களை வகுப்பறை யில் பாராட்டலாமே. எழுதுதலைத் தொடர் மதிப்பீடு செய்ய மறவாதீர்கள்.



## பத்திரிக்கைச் செய்தி

தினசரி நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சிச் செய்திகள் போன்றவற்றை மாணவர்கள் தினமும் வாசித்துத் தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானதாகும். இதைக் கருத்தில் கொண்டே இந்தச் செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது. பத்திரிக்கைச் செய்தி எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றிய அறிவும் மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். எவ்வாறு இதைச் செயல்படுத்தலாம்?

- ♦ பள்ளிகளில் செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம் இருக்கும். ஞாபகப்படுத்துங்கள்.
- ♦ ஒரு நாளிதழை வாங்கி வந்து வாசிக்கச் சொல்லுங்கள்.
- ♦ முன்தினம் பள்ளியில்/வகுப்பில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நீங்களே பத்திரிகைச் செய்தியாக மாற்றி மாணவர்களிடம் வாசித்துக் காட்டலாம்.
- ♦ ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் முக்கியமான ஒரு பத்திரிகைச் செய்தியைக் கொண்டு வந்து வகுப்பில் வாசித்துக் காட்டலாம்.
- ♦ செய்திகளின் உள்ளடக்கத்திற்கு ஏற்ப குரல் ஏற்றத் தாழ்வுடன் வாசிக்கும் திறன் வளர வேண்டும்.

**பத்திரிகைச் செய்தி**

- ♦ கவர்ச்சியான தலைப்பு.
- ♦ தலைப்பு - பெரிய எழுத்துருவில்.
- ♦ நாள், இடம்.
- ♦ செய்தியின் உண்மைத்தன்மை.
- ♦ முக்கிய செய்தியைத் தலைப்புச் செய்தியாகக் கூறியபின் விளக்கமாகக் கூறுதல்.
- ♦ மொழிநடை.
- ♦ வார்த்தை, வாக்கியத் தெளிவு.

இப்படிச் செயல்பாட்டைத் தொடங்குங்கள். சரியான ஒரு கலந்துரையாடல் வழிகாட்டலுக்குப் பின் செயல்பாட்டைச் செய்யட்டும்.
ஒருவர் எழுதியதை வாசிக்கட்டும்.
மற்றவர்கள் கருத்தைக் கூறட்டும்.
அவரவர் எழுதியதை சுய மதிப்பீடு செய்யட்டும்.
திருத்தி எழுதட்டும்.
பத்திரிக்கைச் செய்தியின் அடிப்படை இயல்புகளை அறிந்திருப்பார்கள். அல்லவா? படைப்புத் தொகுப்பில் சேருங்கள்.



## படம் பார்த்துக் கருத்து கூறுதல்

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் என்றொரு பழமொழி உண்டு. எவ்வளவு தான் வார்த்தைகளால் விளக்கம் சொன்னாலும் ஒரு படத்தைப் பார்த்துக் குழந்தை புரிந்து கொள்வதைப் போல புரியவைக்க முடியாது.

நம்மைச் சுற்றி மாசடைதல் எவ்வாறெல்லாம் நடைபெறுகிறது என்பதைப் படங்களைப் பார்த்துச் சொல்லட்டும்.

**காற்று எவ்வாறெல்லாம் மாசடைகிறது?**

**தண்ணீர் எவ்வாறெல்லாம் மாசடைகிறது?**

கருத்துகளைக் கூறிக் குறிப்புகளாக எழுதட்டும்.

**படங்களும் கருத்துக்களும் . . .**

- தலைப்பு எழுதலாம்
- உரையாடல் எழுதலாம்
- காட்சிக்கு ஊகம் எழுதலாம்
- படங்களை ஒப்பிடலாம். தொடர்பு படுத்தலாம்
- பொருத்தமான கருத்துகள்
- கேள்விகள் உருவாக்கலாம்
- கதை/கவிதை எழுதலாம்

**வீட்டுச் சுற்றுப்புறம், பள்ளிச் சுற்றுப்புறம் இவற்றைத் தூய்மையாக வைத்துக்கொள்ள நான் மேற்கொள்ளும் செயல்பாடுகள் என்ற பகுதியை மாணவர்கள் சுயமாக நிறைவு செய்யட்டும்.**

- **வீடு, வீட்டுச் சுற்றுப்புறம்**
  - வீட்டைச் சுற்றிச் சாக்கடை நீர் தேங்க விடமாட்டேன்.
  - 
- **பள்ளி, பள்ளிச் சுற்றுப்புறம்**
  - காகிதக் குப்பைகளைப் போட மாட்டேன்.
  - 



## நிறைவு செய்வோம்

பிரச்சினை, பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற கருத்துடன் அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயல்பாட்டை மாணவர்களே செய்யட்டும். வீட்டுச் செயல்பாடாகவும் இதைச் செய்யலாம். நிறைவு செய்யட்டும். வகுப்புக் குறிப்பேட்டிலும் எழுதட்டும். படைப்புத் தொகுப்பில் உட்படுத்துங்கள்.

**நான் கற்றுக் கொண்டவை**

**ஒவ்வொரு அலகின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பகுதியை மாணவர்களே சுயமாக நிறைவு செய்யட்டும். இதில் சிறிய வழிகாட்டல் மட்டுமே ஆசிரியருடையதாக இருக்கவேண்டும். மாணவர்கள் அடைந்துள்ள கற்றல் அடைவுகளை அளவிடுவதற்கான ஒரு அளவுகோலாக இதைக் காண வேண்டும். கற்றல், கற்பித்தல் எவ்வாறு நடைபெற்றுள்ளன என்பதையும் அளவிடமுடியும். எனவே மாணவர்கள் தங்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.**

## இலக்கணம் - வேற்றுமை

ஒரு மொழியைப் பிழையின்றிப்பேச, எழுத இலக்கணம் இன்றியமையாதது. மொழிக்கற்பித்தலில் ஆரம்ப வகுப்பு முதலே மொழிக்கூறுகள் பற்றி கற்பிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் ஏழாம் வகுப்பில் முதல் பாட இறுதியில் 'வேற்றுமை' என்ற இலக்கணப் பகுதி உரைநடை வடிவில் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இதுபற்றிய விளக்கங்களையும் அடிப்படைக் கூறுகளையும் புரிந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கம் கொடுத்தல் வேண்டும். இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளுடன் மேலும் பாடப்பகுதியையும் பயன்படுத்தி இந்த இலக்கணப்பகுதியைப் பயனுள்ளதாக்குங்கள்.

**வேற்றுமை உருபுகள் பற்றிய நன்னூல் சூத்திரம்**

**பெயரே ஐ ஆல் கு இன் அது கண்**
**விளி என்றாகும் அவற்றின் பெயர் முறை.**

***நன்னூல் 292***

முதலாம் வேற்றுமை உருபு இல்லை. இரண்டு, மூன்று, நான்கு. ஐந்து, ஆறு, ஏழாம் வேற்றுமை உருபுகள் முறையே, ஐ. ஆல், கு, இன், அது, கண், என்பனவாகும்.

எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை இது விளிவேற்றுமை எனவும் அழைக்கப்படும்.

# அலகு மதிப்பீடு (மாதிரி)

## செயல்பாடு 1

உலகச் சுற்றுச் சூழல் தினம் - இதையொட்டி நடை பெறும் கவிதைப் போட்டியில் '**பயன் தரும் மரங்கள்**' என்ற தலைப்பில் கவிதைப் போட்டியில் அகிலாவும் பங்கு பெற்றாள். அவளுக்கு உதவி செய்யும் வகையில் கீழ்க் காணும் **கவிதை**யில் தொடர்ந்து எட்டு வரிகள் எழுதிப் **பூர்த்தி செய்யுங்கள்.**

பாப்பா பாப்பா என்னைப்பாரு!

பலன்கள் தருவேன் பலநூறு!

காயும் கனியும் தந்திடுவேன்!

காற்றும் சுத்தமாய் மாற்றிடுவேன்

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

## செயல்பாடு 2

"மார்ச் 18இல் வயநாடு வனப்பகுதியில் பெரும் காட்டுத்தீ பரவியது. இதனால் ஏராளமான அரிய வகை வன விலங்குகள், பறவைகள், மரங்கள் எரிந்து சாம்பலாயின. காட்டுத் தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி வனத் துறையினர் விசாரித்து வருகின்றனர்".

இந்தச் செய்தியின் அடிப்படையில் ஒரு '**பத்திரிக்கைச் செய்தி**' தயாரியுங்கள்.

## செயல்பாடு 3

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் ஒரு **கதை** எழுதுங்கள். கதைக்கு ஒரு நல்ல தலைப்பு கொடுக்க மறவாதீர்கள்.

செந்தில் - வீட்டைச்சுற்றி குப்பை - சாக்கடை - சுத்தமாக வைப்பதில்லை - கொசு - மீண்டும் மீண்டும் குப்பை - திடீரென்று காய்ச்சல் - மருத்துவமனை - சிக்கன் குனியா - மிகவும் துன்பப்படுதல் - சுகாதாரம் பற்றிப் புரிதல் - திருந்துதல் - சுற்றுப்புறம் - சுகாதாரம் பாதுகாக்க உறுதி எடுத்தல்.

## செயல்பாடு 4

கீழே ஒரு பாடல் கொடுக்கப்பட்டுள்ளது. இதைக் **கதை வடிவில்** மாற்றி எழுதுங்கள்.

முன்பு ஒரு காலத்துல
மருதமலைக் காட்டுக்குள்ளே
மருதன் என்னும் விறகு வெட்டி
மரம் வெட்டப் போனானே
மரம் வெட்டும் வேலையிலே
கையை வெட்டிக் கொண்டானே!
மரத்தின் இலையைச் சாறு பிழிந்து
மருந்தாய் ஆக்கிக் கொண்டானே!
"நான் வெட்டிய மரமே தான்
மருந்தாய் எனக்கு ஆனதுவே!
உயிரைத் தந்த மரத்தை நான்
உயிராய்க் காத்துக் கொள்வேனே!
மரத்தை வெட்டமாட்டேன் என்று
மனதில் உறுதி கொண்டானே."

## மதிப்பீட்டுக் குறிப்புகள்

1. **கவிதையை நிறைவு செய்தல்**
   - கருத்தும் கற்பனையும் உள்ளது.
   - தனித்தன்மை வாய்ந்த மொழி நடை.
   - கருத்தும் கற்பனையும் வெளிப்படக் கூடிய தலைப்பு.
2. **பத்திரிக்கைச் செய்தி**
   - தெளிவான கருத்து வரிசை
   - பொருத்தமான மொழி, கவர்ச்சி
   - பொருத்தமான தலைப்பு
3. **கதை**
   - குறிப்பிட்ட நேரத்திற்குள் முக்கிய கருத்துகளைக் கண்டுபிடித்தல்
   - கருத்துகளைச் சுருக்கிக்கூறவோ, எழுதவோ செய்தல்
   - கருத்துகளின் தொடர்பை அறிதல்
4. **மொழி வடிவ மாற்றம்**
   - கருத்துக் தெளிவு, பத்தி பிரித்துக் கூறுதல்
   - மாற்றி எழுதும் திறன், எழுத்து நடை
   - செய்திகளைத் தொகுத்தல்